# உயில் சாசனம்

201_ம் வருடம், மாதம் ம் நாள், ________________ என்ற விலாசத்தில் வசிக்கும் திரு.________ அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு. ________ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) ஆகிய நான் பிறர் தூண்டுதல் ஏதுமின்றி என்னுடைய சுயநினைவுடன் எழுதி வைக்கும் உயில் சாசனம் என்னவென்றால்

இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள ________ மாவட்டம், ______________ சொத்தானது நான் எனது சொந்த வருவாய் மற்றும் சேமிப்பைக்கொண்டு ________ தேதியிட்ட _________ சார்பதிவக 1 புத்தக ஆவண எண்.______/____ மூலம் கிரையம் பெற்று அது முதல் சர்வ சுதந்திரமாய் ஆண்டனுபவித்துக்கொண்டு வருகிறேன்.

தற்போது எனக்கு வயதாகிவிட்ட காரணத்தினால், நான் நல்ல நிலையில் உள்ள போதே எனக்கு பாத்தியப்பட்ட அசையும் மற்றும் அசையா சொத்துக்களைப் பொருத்து என்னுடைய ஆயுட்காலத்திற்குப் பிறகு என்னடைய வாரிசுகளுக்கள் எந்தவிதமான சண்டை சச்சரவுகள் ஏற்படக்கூடாது என்கிற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இந்த உயில் சாசனம் எழுதி வைத்துள்ளேன்.

எனக்கு ___________ என்கிற மனைவியும், இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர். எனது மகள்களுக்கு எனது வருவாய் மற்றும் சேமிப்புகளைக் கொண்டு நல்ல முறையில் சீர்வரிசைகள் செய்து திருமணம் செய்து வைத்து அவரவர்கள் குடும்பத்துடன் நல்ல முறையில் வாழ்ந்து வருகிறார்கள்.

தற்போது எனக்கு வயதாகிவிட்ட காரணத்தினால் எனது காலத்திற்கு பிறகு இந்த உயிலில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை எனது மகன்கள் மட்டுமே அனுபவிக்கும் பொருட்டு இந்த உயில் ஆவணம் எழுதி வைக்கப்படுகிறது. அதன்படி சொத்து விவரத்தில் கண்ட 1வது அயிட்டம் சொத்தை எனது மூத்த

Verified RealEstate™

மகன்_______ம் 2வது அயிட்டம் சொத்தை இளைய மகன் _______ எனது காலத்திற்கு பிறகு சர்வ சுதந்திரமாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ள வேண்டியது.

இந்த உயில் ஆவணத்தில் குறிப்பிட விடுபட்ட மற்றும் எனது எஞ்சிய வாழ்நாளில் என்னால் வாங்கப்படும் இதர அசையும் மற்றும் அசையா சொத்துக்களை பொருத்து எனது இரு மகன்களும் சமமாக பிரித்துக்கொள்ள வேண்டியது.

இதனடியில் கண்ட சொத்தைக்குறித்து என்னுடைய ஜீவிய காலத்திற்கு பிறகு மேற்படி இவர்களைத் தவிர வேறு என்னுடைய இதர வாரிசுகளுக்கு எவ்தவிதமான பாத்தியமோ, பின் தொடர்ச்சியோ கிடையாது.

இந்த உயில் சாசனமானது என்னடைய ஜீவிய காலத்திற்கு பிறகு அமுலுக்கு வரவேண்டியது இந்த உயில் சாசனத்தை என்னுடைய ஜீவிய காலத்திற்குள் மாற்றவும் ரத்து செய்யவும் எனக்கு பூரண அதிகாரமுண்டு.

இந்தப்படிக்கு என்னுடைய முழுமனச் சம்மதத்துடன் பிறர் தூண்டுதல் ஏதுமின்றி என்னுடைய சுய நினைவுடன் கீழ்கண்ட சாட்சிகள் முன்னிலையில் மனப்பூர்வமாக எழுதி வைத்த உயில் சாசனம் இதுவே ஆகும்.

## சொத்து விவரம்

Verified RealEstate™